# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 26.09.2019 (முற்பகல்)**

**முன்னிலை**

## திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,

**மாநில தகவல் ஆணையர்**

……………

**வழக்கு எண்.SA1888/F/2019**

திரு க. மக்புல் அஹமது … மேல்முறையீட்டாளர்

**எதிர்**

பொதுத் தகவல் அலுவலர்,
செயற்பொறியாளர் அலுவலகம்,
தமிழ்நாடு மின்சார வாரியம்,
தென்னூர்,
திருச்சி - 620 017. … பொது அதிகார அமைப்பு

பார்வை:-

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 26.06.2018 |
| முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1) | 28.08.2018 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3) | 02.03.2019 |

******

# ஆணை

இன்று (26.09.2019) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு க. மக்புல் அஹமது ஆஜராகவில்லை. 23.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக உடல்நிலை சரியில்லாத காரணத்தால் விசாரணைக்கு ஆஜராக முடியவில்லை எனவும், 23.04.2019 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்டுள்ள பதிலில் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ள இடம் மின் இணைப்பு பெற்றுள்ள A.ஜியாவுல் ரஹ்மான் என்பவருக்கு வக்ஃபு வாரியத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது என்று தகவல் வழங்கப்பட்டுள்ளது எனவும், ஆனால் அதற்குரிய ஆவண நகலை அளிக்கவில்லை என்றும், அதனை தகவலாக அளிக்க ஆணையிடும்படி கேட்டுள்ளார். பொது அதிகார அமைப்பின் சார்பாக ஒப்புதல் பெற்ற திரு S.ரெங்கசாமி, உதவி செயற்பொறியாளர், இயக்குதலும் காத்தலும், தென்னூர், திருச்சி ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 26.06.2018 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி டவுன் தென்னூர் கிராமத்தில் உள்ள ஹஜரத்மீர் அசனுல்லாஷா தர்காவுக்கு சொந்தமான இடத்தில் உள்ள சர்வே வார்டு E பிளாக் 24 நகரளவு எண்.32-ல் கட்டப்பட்டுள்ள வீட்டிற்கு மின் இணைப்பு வழங்கக்கேட்டு கமால்தீன் த/பெ.அசன்முகமது மற்றும் ஜியாஅல்ரஹ்மான் த/பெ.அப்துல் ரவூப் நஸீதான் ஆகியோர் கொடுத்துள்ள விண்ணப்பங்களின் நகல் மற்றும் அத்துடன் வரப்பெற்ற ஆவணங்களின் நகல் தகவலாக வழங்கக்கேட்டு, பொதுத் தகவல் அலுவலர், செயற்பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மின்சார வாரியம், தென்னூர், திருச்சி என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை என்றும், தான் கோரிய தகவல்களை வழங்கக் கேட்டும், 28.08.2018 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்கவில்லை என தெரிவித்தும், தான் கோரிய முழுமையான தகவல் பெற்று வழங்கவும் கேட்டும், பிரிவு 19(3)ன் கீழ் 02.03.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், ஏற்கனவே 25.07.2018, 26.09.2018 மற்றும் 23.04.2019 தேதியிட்டு மேல்முறையீட்டாளருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேல்முறையீட்டாளர் கோரிய கடித நகல் தங்கள் அலுவலகத்தில் பெறப்படவில்லை என்றும், அதனை பெற்று வழங்குவதாகவும் ஆணையத்தின் முன்பு தெரிவித்தார்.

5. விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு வழங்குகிறது:

**மனுதாரர்/மேல்முறையீட்டாளர் 26.06.2018 தேதியிட்ட மனுவில் கோரிய தகவலின்படி, மேல்முறையீட்டாளர் குறிப்பிட்ட கடித நகலை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, வழங்கப்பட்ட தகவல் மற்றும் மேல்முறையீட்டாளர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்க தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

**ஒம்/- ச.த. தமிழ்குமார்**
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண்.SA1888/F/2019</u>**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்,
செயற்பொறியாளர் அலுவலகம்,
தமிழ்நாடு மின்சார வாரியம்,
தென்னூர்,
திருச்சி - 620 017.

**<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>**

திரு க. மக்புல் அஹமது,
த/பெ. கபீர் அஹமது,
எண்.13, நடுசுவான்காரத்தெரு,
திருச்சிராப்பள்ளி - 620 008.

**Copy to: Judgement File.**

**Spare/ AM/PS - 031019**